***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 3/2011 – P.W. 2 (LW8)***

| | |
|---|---|
| *Name* | அருள்ஜோதி |
| *Father/Husband's Name* | க/பெ.ஆனந்த் |
| *Village* | சுந்தரக்கோட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *42* |

*1 முதல் 3* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 12.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடுத்தனம் செய்து வருகிறேன்.

தோராயமாக 2009 காலக்கட்டத்தில் போலீசார் என்னிடம் எனது கணவரின் மன்னார்குடி SBI வங்கி கணக்கில் இருந்து பணத்தை எடுத்துவிட்டதாக கூறினார்கள். அச்சமயம் எனது கணவர் கத்தார் நாட்டில் வேலை செய்து கொண்டிருந்தார். அந்த சமயத்தில் எங்களிடம் ATM card மற்றும் Net banking போன்ற வசதிகள் இல்லை. அப்போது தான் ATM Card விண்ணப்பதிருந்தார். அவர் சென்று ATM Card வரவில்லை என்று வங்கியில் கேட்டதற்கு Postal மூலமாக வரும் என்று கூறினார்கள். அவர் கத்தார் நாட்டிற்கு போகும் வரை ATM Card வரவில்லை. எங்கள் வீட்டில் வேறு யாரும் அந்த வங்கி கணக்கை இயக்குவதில்லை. போலீசார் தகவல் தெரிவித்தவுடன் எனது கணவர் வெளிநாட்டில் இருந்து வந்து வங்கி கணக்கை பார்த்தார். அதில் பணம் குறைந்திருந்ததாக என்னிடம் கூறினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். வேறு விபரங்கள் எதுவும் தெரியாது.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 3/2011 – P.W. 3 (LW13)***

| | |
|---|---|
| *Name* | செல்வராஜ் |
| *Father/Husband's Name* | வீராசாமி |
| *Village* | தஞ்சாவூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *61* |

*1 முதல் 3* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 12.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் புதுக்கோட்டை SBI வங்கியில் முதன்மை மேலாளராக பணிபுரிந்து தற்சமயம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன்.

கடந்த 2010 ம் வருடம் ஜீலை மாதம் மன்னார்குடி SBI வங்கி கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்தபோது 2009 ம் வருடத்தில் இருந்து மன்னார்குடி SBI வங்கி கிளையில் கிளை மேலாளராக இருந்த திரு. மணி என்பவர் மேற்படி வங்கியில் பணிபுரிந்த அன்பு மணி என்பவர் வசம் ATM card கள் இருந்தது. அந்த சமயத்தில் ரேவதி என்பவர் SBI வங்கி கிளையில் தற்காலிக ஊழியராக பணியில் இருந்தார். அப்போது ATM Card மற்றும் pin number வங்கி தான் வரும். அதனை அன்புமணி என்பவர் வாடிக்கையாளருக்கு கொடுக்க வேண்டும். அந்த சமயத்தில் ரேவதி அன்புமணிக்கு கீழ் வேலை செய்ததாக சொன்னார்கள். மேற்படி ரேவதி அந்த சமயத்தில் ATM card யும் Pin யும் misuse செய்து வங்கியில் உள்ள வாடிக்கையாளர் கணக்கில் இருந்து பணம் எடுத்து மோசடி செய்ததாக புகார் இருப்பதாக என்னிடம் சொன்னார்கள். மேற்படி தகவலை நான் join பன்னும்போது SBI கிளைமேலாளர் மணி என்பவர் எனக்கு ஏற்கெனவே வங்கியில் நடந்த தகவல் குறித்து என்னிடம்

சொன்னார். போலீசார் என்னை விசாரித்தபோது மேற்படி தகவலை தான் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த பிரச்சனை சம்பந்தமாக சம்பந்தப்பட்ட ஊழியர் அன்புமணி நிரந்தரமாக பணி நீக்கம் செய்துவிடப்பட்டார் என்றால் சரிதான். அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை சென்றுகொண்டிக்கிறது என்றால் சரிதான். வங்கி நிர்வாகம் எதுவும் தற்காலிக ஊழியரை நிர்வாகத்தின் மூலம் நியமிப்பது இல்லை என்றால் சரிதான்.

ஒரு தற்காலிக ஊழியராக ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் பணிபுரிய வேண்டும் என்றால் மேலாளரின் அனுமதியில்லாமல் பணிபுரிய முடியாது என்றால் சரிதான். ATM உடைய Pin numbers அது மூடிய உறைக்குள் இருக்கும். அது confidence record என்றால் சரிதான். அந்த மூடிய உறையை open செய்து பின் நம்பரை சொரண்டி பார்க்கும் அதிகாரம் வங்கியினுடைய வாடிக்கையாளருக்குதான். எங்களுடைய ஊழியர்கள் யாருக்கும் இல்லை.

இந்த எதிரிகளை தவறாக தொடர்புபடுத்தி மேலாளர் உண்மை சங்கதிகளை நேர்மாறாக்கி பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பணம் எடுத்ததாக சொல்லப்பட்ட தொகைகள் அனைத்தையும் வங்கி ஊழியர் அன்புமணியால் செலுத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கோப்புகளை பார்த்தால் தான் தெரியும். பின் நம்பர்ஸ் எல்லாம் எனது வங்கி கொடுப்பது கிடையாது. எங்களது துறையின் தலைமையகத்தில் இருந்து தான் கொடுக்கப்படும். SBI வங்கியில் ATM இருக்கும் இடங்களில் எல்லாம் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டியிருக்கிறது என்றால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.